பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**25 03 2026** **WEDNESDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1.** தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல் புகார் தொடர்பாக உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

**2.** தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் போட்டியிடும் தொகுதிகள் குறித்த விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**3.** மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கொள்கைக்கானது என்று திமுக கூறியுள்ளது.

**4.** நாடு முழுவதும் பெட்ரோலியப் பொருட்கள் சீராக விநியோகம் செய்யப்பட்டு வருவதாக எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

**5.** ஆசிய கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியா இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

---- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>

தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல் புகார் தொடர்பாக உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் பத்திரிகை தகவல் அலுவலகத்தின் தேர்தல் கையேட்டினை வெளியிட்டு அவர் பேசினார்.

***(Sound Byte — அர்ச்சனா பட்நாயக் (1) — 45 Sec. )***

தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல் தொடர்பாக, சமூக ஊடகங்களும் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் திருமதி அரச்சனா பட்நாயக் தெரிவித்தார்.

***(Sound Byte — அர்ச்சனா பட்நாயக் (2) — 35 Sec. )***

இந்த நிகழ்ச்சியில் பேசிய பத்திரிகை தகவல் அலுவலகத்தின் தென்மண்டல தலைமை இயக்குநர் திரு வை.பழனிசாமி, போலி செய்திகள் பரவாமல் தடுக்கும் நோக்கில் ஊடகங்கள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

***(Sound Byte — பழனிசாமி — 34 Sec. )***

இந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக பிரசார் பாரதியின் மாவட்ட செய்தியாளர்களுக்கான தேர்தல் நடைமுறைகள் குறித்த பயிலரங்கும் நடைபெற்றது.

இதில் பங்கேற்ற கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரி திரு சிவஞானம், தேர்தல் நடைமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் குறித்து, தேர்தல் செலவினங்களை கண்காணிப்பதற்கான மாநில அளவிலான சிறப்பு அதிகாரி திருமதி சாமூண்டீஸ்வரி விளக்கினார்.

தேர்தல் நேர்மையாகவும், நியாயமாகவும் நடைபெறுவது குறித்து முன்னாள் தலைமை தேர்தல் அதிகாரி திரு **T S** கிருஷ்ணமூர்த்தி இந்த பயிலரங்கில் எடுத்துரைத்தார்.

இந்த பயிலரங்கில், ஆகாஷ்வாணி செய்திப்பிரிவு கூடுதல் தலைமை இயக்குநர் திரு **Dhiraj Kakadia** காணொலி வாயிலாக சிறப்புரையாற்றினார்.

<<<<<<>>>>>

தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் போட்டியிடும் தொகுதிகள் குறித்த விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, இதற்கான பட்டியலை வெளியிட்டார்.

இதன்படி, இக்கூட்டணியில் பிஜேபி-க்கு மயிலாப்பூர், தளி, மொடக்குறிச்சி, உதகமண்டலம், அவினாசி, திருப்பூர் தெற்கு, கோயம்புத்தூர் வடக்கு, கந்தர்வகோட்டை, புதுக்கோட்டை, திருப்பத்தூர், மதுரை-தெற்கு, சாத்தூர், திருச்செந்தூர், வாசுதேவநல்லூர், ராதாபுரம், நாகர்கோவில், விளவங்கோடு, ஆவடி, திருவண்ணாமலை, தஞ்சாவூர், திருவாரூர், அறந்தாங்கி, மானாமதுரை, ராமநாதபுரம், குளச்சல், பத்மநாபபுரம் மற்றும் ராசிபுரம் தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

பாமக-விற்கு சேலம்-மேற்கு, தருமபுரி, பென்னாகரம், விக்கிரவாண்டி, சோளிங்கர், மயிலாடுதுறை, திருப்போரூர், உத்திரமேரூர், ஜெயங்கொண்டம், போளூர், செஞ்சி, விருதாச்சலம், ரிஷிவந்தியம், காட்டுமன்னார்கோவில், கீழ்வேளூர், பெரம்பூர், சேலம்-வடக்கு மற்றும் அம்பத்தூர் தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அமமுக-விற்கு பெரியகுளம், மன்னார்குடி, திருவையாறு, காரைக்குடி, திருப்பத்தூர், நாங்குநேரி, ஒட்டப்பிடாரம், திருச்சி-மேற்கு, சைதாப்பேட்டை, பூந்தமல்லி மற்றும் மடத்துக்குளம் தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அஇஅதிமுக போட்டியிடும் முதலாவது வேட்பாளர் பட்டியலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாமக-வின் முதலாவது வேட்பாளர் பட்டியலும் இன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, கீழ்வேளூர் தொகுதியில் திரு வடிவேல் ராவணனும், அம்பத்தூரில் திரு கே. என் சேகரும், செஞ்சியில் திரு கணேஷ்குமாரும் போட்டியிடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கொள்கைக்கானது என்று அக்கட்சியின் தலைவர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மதச்சார்பின்மை, மாநில உரிமை, சமூக நீதி, சமத்துவம் ஆகியவற்றை

அடிப்படையாக கொண்டு இக்கூட்டணி அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கூட்டணியின் வெற்றிக்காக திமுக-வினர் கடுமையாக பணியாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வெற்றியை இலக்காக கொண்டு செயல்படுவதே நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

திமுக கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்படும் தொகுதிகள் தொடர்பான பேச்சுவார்த்தை சுமூகமாக நடைபெற்று வருவதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஓரிரு நாட்களில் தொகுதிகளை அடையாளம் காணும் பணி இறுதி செய்யப்படும் என்றார்.

ஒரே தொகுதியை இரு கட்சிகளும் கோருவதால், பேச்சுக்கள் நடைபெற்று வருவதாகவும் திரு செல்வப்பெருந்தகை தெரிவித்தார்.

இதற்கிடையே, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் பொதுச்செயலாளர் திரு D. செல்வம் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கட்சி விரோத செயல்களில் ஈடுபட்டதன் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் கூறியுள்ளது.

<<<<<>>>>>

நாடு முழுவதும் பெட்ரோலியப் பொருட்கள் விநியோகம் சீராக நடைபெற்று வருவதாக எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

பெட்ரோலியப் பொருட்கள் பற்றாக்குறை நிலவுவதாக சமூக வலைதளங்களில் தவறான செய்திகள் பரப்பப்படுவதாகவும், இதனை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என்றும் எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தேவையின்றி சமையல் எரிவாயு முன்பதிவு செய்வதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தருமபுரி மாவட்டத்தில் வாக்களிக்க வேண்டிதன் அவசியத்தை வலியுறுத்தி மகளிர் சுயஉதவிக்குழுவினர் சார்பில் நடைபெற்ற கையெழுத்து இயக்கத்தினை ஆட்சியர் திரு சதீஷ் தொடங்கிவைத்தார்.

-----------------

விருதுநகர் மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு அனுப்பும் பணிகளை ஆட்சியர் டாக்டர் சுகபுத்ரா இன்று தொடங்கிவைத்தார்.

--------------

நெல்லை மாவட்டத்தில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் ஆட்சியர் திரு சுகுமார் தலைமையில் இன்று நடைபெற்றது.

-------------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் நூதன முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

----------------

திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டில் அங்கன்வாடி பணியாளர்கள் பங்கேற்ற தேர்தல் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

----------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளை பொதுப்பார்வையாளர் திரு தேம்ஜென்வாபாங் இன்று ஆய்வு செய்தார்.

-----------------

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் அருகே வனப்பகுதியில் கடமானை வேட்டையாடிய இரண்டு பேரை வனத்துறையினர் கைது செய்தனர்.

<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஆசிய கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியா இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

பாங்காக்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் குழு பிரிவில் இந்தியா இப்பதக்கங்களை கைப்பற்றியது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Rithi** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Prathamesh Jawakar** மற்றும் **Rajat Chauhan** அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

--------------------

வியட்நாம் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரித்விக் சஞ்ஜீவி சத்தீஷ்குமார் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர் **21-13, 21-16** என்ற செட் கணக்கில், சீன தைபே-யின் **Kuo Kuan Lini**-ஐ வென்றார்.

இப்பிரிவில் **Pranay Shettiger** -ரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

**<<<<<<END>>>>>**